## வரையறுத்த இலங்கை பசளைகள் கம்பனியி – 2018/2019

---

### 1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

வரையறுத்த இலங்கை பசளைகள் கம்பனியின் ("கம்பனி") 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் வரையறுத்த இலங்கை பசளைகள் கம்பனியின் 2019 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது கம்பனியின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் கம்பனி

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக தாக்கம் ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக கம்பனியின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக கம்பனியின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது கம்பனியின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது கம்பனியின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 07 இன் 38 ஆம் பந்தியின் பிரகாரம் பொறுப்புக்களுக்கான பிணையாக வைக்கப்பட்டுள்ள | தவறுதலாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | நிதிச் சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் நாணயத்தாள்களை திறப்பதற்காக பிணையாக வைக்கப்பட்டுள்ள ரூபா 710,000,000 தொகையான நிலையான வைப்புக்கள் தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | களணி பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான கம்பனி அமைந்துள்ள காணியின் உரிமை கம்பனியின் பெயருக்கு பொறுப்பேற்றுக் கொளள்ளப்படாது அப்பெறுமதி முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,720,000,000 தொகையாக இருந்ததுடன் அது மீளாய்வாண்டில் ரூபா 1,868,965,707 தொகைக்கு மீள்மதிப்புச் செய்யப்பட்டு கம்பனியின் சொத்துக்களாகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி அந்த அளவால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | களணி பிரதேச செயலகத்தினால் உரிமையை கம்பனிக்கு ஒப்படைப்பதற்காக உரிய கடிதங்கள் காணி ஆணையாளர் நாயகத்திற்கு 2016 திசெம்பர் 26 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க காணிகள் அமைச்சின் மூலம் சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | காணியின் சட்டரீதியான உரிமையை கம்பனிக்கு பொறுப்பேற்று நிதிக்கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான 28 பேர்ச்சர்ஸ் காணியின் உரிமையை கம்பனி தமக்கு பொறுப்பேற்றுக் கொள்ளாது அக்காணிக்காக கம்பனிக்கு கிடைக்க வேண்டிய இழப்பீடாக ரூபா 12,600,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 28 பேர்ச்சர்ஸ் காணி கொழும்பு வீதிக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பொறுப்பேற்கப் பட்டிருந்தது. காணியில் அமைந்துள்ள கட்டிடத்திற்காக இழப்பீடு வழங்கப்பட்டிருந்ததுடன் காணிக்கு உரிமை இல்லாததன் காரணமாக இழப்பீடு வழங்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களின் சட்ட ரீதியான உரிமையை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | கம்பினயால் பசளை களஞ்சியப்படுத்தப்படுகின்ற அக்குரஸ்ஸ பிரதேச செயலகத்திற்குச் சொந்தமான | இந்நிதி கிடைத்த ஆண்டில் கணக்குகளில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை | ரூபா 6,460,000 தொகையான தவணைக் குத்தகையும் |

| | | | |
|---|---|---|---|
| களஞ்சியம் அமைந்துள்ள காணிக்காக 2015 ஏப்ரல் 01 இலிருந்து 2019 மார்ச் 31 வரையான குத்தகை மற்றும் தண்டப்பணமாக ரூபா 6,460,000 செலுத்த வேண்டிய போதிலும், அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட்டுள்ளது. | தண்டப் பணமும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வணிக கடன்பட்டோர் | 156,833,043 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் அக்கடிதத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதத்தை கணக்காய்விற்குப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நானாவித கடன்பட்டோர் | 105,534,809 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை. | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதத்தை கணக்காய்விற்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைக்க வேண்டிய மீதி | 19,159,274,649 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் | மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்படவில்லை. | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதத்தை கணக்காய்விற்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வணிக | 5,621,686,832 | மீதிகளின் | மீதிகளை | மீதிகளின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடன் கொடுத்தோர் மீதி | | உறுதிப்படுத்தல் கடிதம் | உறுதிப்படுத்துவதற்காக கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் உறுதிப்படுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட வில்லை. | உறுதிப்படுத்தல் கடிதத்தை கணக்காய்விற்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | நானாவித கடன் கொடுத்தோர் மீதி | 31,753,673 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் | ரூபா 31,753,673 பெறுமதிக்கான மீதிகளின் உறுதிப்படுத்தலானது நாட்குறிப்பு மற்றும் கொடுப்பனவு உறுதிப்பத்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படலாம். | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதத்தை கணக்காய்விற்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் மாதம் 07 ஆந் திகதிய PED 03/2018 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | திறைசேரியின் அங்கீகாரமின்றி மீளாய்வாண்டின் போது ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு படியாக ரூபா 40,739,916 செலுத்தப்பட்டிருந்தது. | ஊக்குவிப்பு படிகளைச் செலுத்துவதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அதற்கான அங்கீகாரம் அல்லது அங்கீகாரத்தை வழங்க முடியாது என தெரியப்படுத்தப்படவில்லை. பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை மாதம் 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வது தொடர்பான தகவல்கள் அரசாங்க நிதிப் | மிகுதியான வாகனங்களை கைதவிர்ப்புச் செய்யும் நடைமுறையின் போது சுற்றறிக்கைக்கு இணங்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என | சுற்றறிக்கையின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிப்பாளர் நாயகம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கைதவிர்ப்புச் செய்யப்பட்ட 06 வாகனங்களுக்குரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | தெரிவிக்கின்றேன். | தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | PED/12 ஆம் இலக்க பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நல்லாட்சிக்காக பொது முயற்சிகளை வழிகாட்டல் கையேட்டின் 06 ஆம் பந்தியின் 5.1 ஆம் பிரிவு | ஒவ்வொரு அரசாங்க கம்பனியினாலும் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் உரிய நிதிக் கூற்றுக்கள் வரைபு ஆண்டறிக்கையுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் உரிய நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 31 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2019 ஏப்ரல் மாதத்தின் போது இடம்பெற்ற குண்டுத் தாக்குதலின் காரணமாக காணப்பட்ட போக்குவரத்துச் சிக்கல் நிலைமை மற்றும் காணப்பட்ட சூழ்நிலை காரணமாக உத்தியோகத்தர்களின் வருகை தடைப்பட்டதனால் கணக்குகளைத் தயாரித்தல் நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை ஆண்டறிக்கையுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 34,506,078 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 24,536,064 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வரிக்குப் பின்னைய நட்டம் ரூபா 9,970,014 ஆல் அதிகரித்திருந்தது. இந்த நட்டம் அதிகரிப்பதற்கு நிருவாகச் செலவுகள், பகிர்ந்தளித்தல் செலவுகள் மற்றும் நிதிக் கிரயம் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது கம்பனியால் திரவப் பசளையைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.5 ஆம் பந்தியின் பிரகாரம் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக மாத்திரம் பிணைப் பாதுகாப்பு வைக்கப்பட வேண்டிய போதிலும் உடன்படிக்கையின் 6.5 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 125 மில்லியன் தொகையான இரண்டு வங்கிப் பிணைப் பாதுகாப்புக்கள் கனியமிலவாயு திரவப் பசளைகள் பெற்றுக்கொள்வதற்காக வைக்கப்பட்டிருந்தது. அந்த வங்கிப் பிணைப் பாதுகாப்புக்களைப் பயன்படுத்தி வழங்குனர் கம்பனியால் ரூபா 112.5 மில்லியன் மேலதிகப் பற்றுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் பின்னர் வங்கிப் பிணைக்குப் பதிலாக கம்பனியின் ரூபா 94,438,766 பெறுமதியான 02 நிலையான வைப்புக்கள் வழங்குனர் கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி மேலதிகப் பற்றின் அத் திகதியில் காணப்பட்ட மீதிக்காக 2018 யூன் மாதம் 15 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் போது வங்கிப் பிணையாக வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.5 ஆம் பந்தியின் பிரகாரம் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்காக மாத்திரம் பிணைப் பாதுகாப்பு வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கையின் குறிப்பிடப்பட்ட திரவ பசளை வழங்குனர் கம்பனிக்கு ரூபா 112.5 மில்லியன் வங்கி மேலதிகப் பற்று வசதி கம்பனியின் நிலையான வைப்பு பிணையாக வைக்கப்பட்டுள்ளது என்பது சரியானதாகும். எனினும், 2018 யூன் 15 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்கள் சபைக் கூட்டத்தின் போது ரூபா 94,438,766 பெறுமதியான 02 நிலையான வைப்புக்கள் அக் கடன் பணத்திற்கு பிணையாக வைப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டு அவ்வாறு செய்யப்பட்டதானது அது வரை காணப்பட்ட ரூபா 240 மில்லியன் பெறுமதியான நிலையான வைப்பினை விடுவிக்கும் குறிக்கோள்களில் என குறிப்பிடுகிறேன். | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | அந்த மேலதிகப் பற்றில் 2019 பெப்ரவரி 12 ஆந் திகதி வரை செலுத்தாது மிகுதியாக காணப்படும் ரூபா 75,980,000 தொகையான மீதி சம்பந்தமாக உரிய வங்கியினால் கம்பனியின் முகாமைத்துவத்திற்கு பல தடவைகள் தெரியப்படுத்தியிருந்தும் முகாமைத்துவம் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் அந்த நிலுவை மீதி மற்றும் ரூபா 4,522,099 | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காணப்பட்ட கடன் பணமும் அதற்குரிய வட்டிப் பெறுமதியுமான ரூபா 80,502,290 பணம் வங்கியினால் பிணையாக வைத்திருந்த கம்பனியின் 02 நிலையான வைப்புக்களிலிருந்து அறவிடப்பட்டிருந்தது என்பதனை ஏற்றுக்கொள்கிறேன். | இது சம்பந்தமாக பொறுப்பான உத்தியோகத்தர் களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உரிய பணத்தை அக் கம்பனியிடமிருந்து அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

தொகையான வட்டிப் பணத்துடன் ரூபா 80,502,290 பணம் பிணையாக வைத்திருந்த கம்பனியின் இரண்டு நிலையான வைப்புக்களிலிருந்து அறவிடப்பட்டிருந்தது.. எனினும் உரிய உடன்படிக்கையின் பிரகாரம் வங்கி மேலதிகப்பற்றை தீர்த்து வைப்பதற்கு திரவ பசளைக் கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் கம்பனியின் முகாமைத்துவம் அப் பணத்தை அறவீடு செய்வதற்கும் முடியாதிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இறுதி இருப்பினுள் மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட ரூபா 1,393,587 தொகையான வழங்கப்படாத பசளை இருப்புக் காணப்பட்டதன் காரமாக ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பசளைகளை களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சிய வசதிகள் போதியளவற்ற மட்டத்தில் காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | இந்த இருப்பு 2019 ஒக்தோபர் 01 ஆந் திகதி வரை அரசாங்க நிறுவனங்களின் மூலம் பேணப்பட்டு வருகின்ற விவசாய பண்ணைகளுக்கு பயன்படுத்துவதற்காக இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட வழங்கப்படாத பசளை இருப்புக்களை எதிர்காலத்தில் பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் தேசிய பசளை செயலகத்தின் அங்கீகாரத்தின் கீழ் முன்னர் குறிப்பிட்டவாறு அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | வழங்கப்படாத பசளை இருப்பு சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்து போதியளவில் களஞ்சிய இட வசதிகள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அம்பாறை விவசாயப் பணிப்பாளர் மற்றும் அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற வேண்டிய 10 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான ரூபா 86,408,870 மீதியில் மூன்று பகிர்ந்தளித்தல் முகவர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ஒரு ஆண்டிற்கு மேல் பழைமையான ரூபா 47,385,977 மீதிகளில் வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ஒரு ஆண்டிற்கு மேல் பழைமையான ரூபா 10,230,000 தொகையான மீதி மற்றும் மஹியங்கணை கமநல சேவை நிலையத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,839,321 மீதியினை அறவீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க நிறுவனங்கள் சம்பந்தமாக கலந்துரையாடல் வாயிலாக பணத்தை அறவீடு செய்வதற்கும் ஏனைய நிறுவனங்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய கடன்பட்டோர் மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 05 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான ரூபா 6,644,781 தொகையான ஏனைய பெற வேண்டிய மீதி மற்றும் 2015 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டு வரும் பொத்துவில் களஞ்சியத்தின் பசளை இருப்பு பற்றாக்குறை தொடர்பான இருப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,694,938 தொகையான மீதி காட்டப்பட்டிருந்ததும் அம் மீதியினை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கையானது கம்பனியால் மீளாய்வாண்டு வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இப் பெற வேண்டிய மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்பனியால் இலங்கை பசளைக் கம்பனிக்கு பரிமாற்று அடிப்படையில் வழங்கப்பட்ட ரூபா 5 மில்லியன் தேறிய நிகழ்கால | அடுத்து வரும் காலாண்டின் போது இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள பசளை | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அப் பசளை இருப்பினை |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியைக் கொண்ட 250 மெட்ரிக் தொன்கள் அளவான பசளைகள் உடன்படிக்கையின் பிரகாரம் 2019 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அப் பசளை இருப்பு ஒப்படைக்கப்படாதிருந்தும் கம்பனியால் உடன்படிக்கையின் பிரகாரம் அப் பசளை இருப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இருப்பிலிருந்து இந்த 250 மெட்ரிக் தொன் யூரியா பசளையை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு இணங்கி கொள்ளப்பட்டது. | விரைவாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இறக்குமதி செய்யப்பட்ட பசளைக்குரிய கோவைகள் முறையாக பூரணப்படுத்தப்பட்ட அதற்குரிய ஆவணங்களுடன் தேசிய பசளைகள் செயலகத்திற்குச் சமர்ப்பிக்காமையின் காரணமாக 2018 ஏப்ரல் 06 ஆந் திகதியில் காணப்பட்ட இருப்பிற்காக ரூபா 184,117,534 மற்றும் 2018 மே மாதத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட பசளைக்காக ரூபா 182,078,147 நிவாரணப் பணம் 2019 மார்ச் 31 ஆந் திகதி வரையும் கம்பனியினால் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | அடுத்துவரும் ஆண்டின் போது உரிய கோவைகளை முறையாக பூரணப்படுத்தி அந்த ஆவணங்களுடன் தேசிய பசளைகள் செயலகத்திற்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே உரிய பிரிவிற்கு இந்த ஆவணங்களை மிகவும் விரைவாக வழங்குமாறு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | உரிய ஆவணங்களைப் பூரணப்படுத்தி ஒப்படைப்பதற்கும் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2018 ஒக்தோபர் 05 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பசளைகளை இறக்குமதி செய்வதற்காக திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்குரிய கொடுப்பனவுகள் தாமதடைவதன் காரணமாக வங்கியினால் அறவிடப்பட்ட வட்டியை தீர்த்துவைத்தல் பசளைக் கம்பனியின் பொறுப்பாகும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. | கம்பனியினால் நாணக் கடிதத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது குறுங்கால வங்கிக் கடன்களின் மூலம் அந்த உண்டியல்களைத் தீர்த்து வைத்து நிவாரணப் பணத்தை பெற்றுக்கொண்டதன் பின்னர் குறுங்காலக் கடன்கள் தீர்த்து வைக்கப்படும். அவ்வாறு செய்யப்படுவதாவது நிவாரணப் பணம் விரைவாகக் கிடைக்கும் | அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு இணங்க நாணய கடிதத்திற்காக கொடுப்பனவுகளை மேற்கொண்டு அரசாங்கத்தின் நிதியை விளைதிறனாக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், பசளைக் கம்பனியின் ரூபா ஒரு பில்லியனுக்கு அதிகமான காலவைப்பு இருக்கையில் 2018/19 ஆம் ஆண்டில் நாணயக் கடிதம் காலவதியாகியதன் அடிப்படையில் தீர்த்து வைக்கப்படாத அளவினை குறுங்காலக் கடனாக மாற்றி அதற்கான கடன் வட்டியாக ரூபா 36,267,366 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டில் நிர்யணிக்கப்பட்டவாறு அக்கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் உரிய உத்தியோகத்தர்களின் பொறுப்பாக இருந்த போதிலும், அந்த உத்தியோகத்தர்களின் கவனயீனத்தின் காரணமாக கம்பனிக்கு அதிக அளவு பணத்தை வட்டியாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | என்ற எதிர்பார்ப்பிலாகும். எனினும், எங்களுக்கு முறையாக நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நிவாரணப் பணம் கிடைக்காமையின் காரணமாக வட்டியாக ரூபா 36,267,366 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும், நாணயக் கடிதத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது எங்களின் நிலையான வைப்புக்கள் முதிர்ச்சியடைவதற்கு முன்னர் மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தும் அதனை கழிவு செய்வதனால் வட்டியாக பெற்றுக்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியில் பெரிய தொகை கம்பனியினால் இழக்கப்படும் எனக் குறிப்பிடலாம். | |
| (எ) | வருடாந்த பெறுகைத் திட்டத்தில் பசளைக் களஞ்சியத்தை நிர்மாணித்தல், உள்ளக வீதியினை அபிவிருத்தி செய்தல் என்பவற்றினை உள்ளடக்கிய ஒப்பந்தத்தின் கீழ் ரூபா 256.08 மில்லியன் பெறுகையினை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அப்பெறுகை அனைத்தும் ஆண்டின் போது மேற்கொள்ளப்படாமையின் காரணமாக அப்பெறுகையினைப் பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து நிர்மாண நடவடிக்கைகளும் 2018/2019 கூட்டிணைந்த திட்டத்தில் மற்றும் 2018/2019 செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காலாண்டு ரீதியாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது. | வருடாந்த பெறுகைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | கம்பனியிடம் வருமானம் உழைக்கக்கூடிய இலங்கை இணக்கப்பாட்டை மதிப்பீடு செய்து ஒப்படைக்கும் சபையில் (SriLanka Accrediaton Board) பதிவு செய்யப்பட்ட ரூபா 18,557,867 | ஆய்வுகூடம் மற்றும் அதன் பதவியணியினர் பதிலீட்டு அடிப்படையில் விவசாய அமைச்சிற்கு அல்லது அவ்வாறு செய்ய முடியவில்லையாயின் விவசாய திணைக்களத்தின் | ஆய்வுகூடத்தின் உபகரணங்களிலிருந்து உச்ச அளவு விளைதிறனைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெறுமதியான ஆய்வுகூட உபகரணங்களுடனான ஒரு ஆய்வுகூடம் காணப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது ரூபா 380,750 வருமானம் மாத்திரம் உழைத்திருந்ததன் காரணமாக வருமானம் உழைப்பதற்கு இயலுமான வகையிலான தந்திரோபாயத் திட்டம் தயாரித்து அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் அதற்கிணங்க ஆய்வுகூடத்தின் வளங்கள் குறைந்த பயன்பாட்டு நிலைமையில் காணப்பட்டது என்பதுவும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தனியான ஒரு நிறுவனமாக செயற்படுவது தொடர்பாக உள்ள இயலுமையினை அமைச்சுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கம்பனியில் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்கு பதவியுயர்வினை வழங்கும் போது ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உரிய தகைமைகள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது கம்பனியின் முகாமையாளர் (நிருவாகமும் மனிதவளங்களும்) மற்றும் உதவி முகாமையாளர் (நிதி) ஆகிய பதவிகளுக்காக கம்பனியில் சேவையாற்றுகின்ற இரண்டு உத்தியோகத்தர்களுக்கு உரிய தகைமைகளை நிறைவேற்றாதிருந்தும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அப்பதவிகளுக்காக பதவியுயர்த்துதல் வழங்கப்பட்டிருந்தது. | உதவி முகாமையாளர் (நிதி) பதவிக்காக அரசியல் பழிவாங்கல்களின் அடிப்படையில் நியாயமின்மை இடம்பெற்றுள்ளதனால் அந்த உத்தியோகத்தருக்கும் முகாமையாளர் (நிருவாகமும் மனித வளங்களும்) என்ற பதவிக்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஓய்வு பெறுவதற்கு அண்மித்துள்ளதனால் அவரின் சேவைக் காலத்தை கவனத்தில் கொண்டு இப்பதவியினை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் உரிய பதவியுயர்வினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முகாமையாளர் (பெறுகை) என்ற பதவிக்காக பதிற்கடமை அடிப்படையில் ஒரு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தும் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பதவிக்காக மீண்டும் ஆட்சேர்ப்பதற்கு 2019 செப்தெம்பர் 21 ஆந் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கிணங்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதவிக்காக நிரந்தரமாக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |